1980 பிப்ரவரி 6]

படுத்த வேண்டுமென்று கருதுகிறோம். பருவ ஏடுகளை வாங்குவது பற்றி, அவர்களின் இஷ்டத்திற்கு விட்டுவிடுகிறோம். முடிந்த அளவு அவர்கள் வாங்கி வருகிறார்கள்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து பிரதிநிதிகள் வரவில்லை என்று சொன்னார்கள். ஆனால் ஆலோசனை குழுவைப் போடுவதற்கு யோசனை இருப்பதாகவும் சொன்னார்கள். அந்த ஆலோசனைக் குழுவில் யார், யார் இடம் பெறுவார்கள்? ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களையே போடுவீர்களா? அல்லது எதிர்க்கட்சிக்காரர்களையும் அந்தக் குழுவில் சேர்த்துக்கொள்வீர்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசினுடைய திட்டங்களுக்கு யார், யாருடைய ஆதரவை நாங்கள் பெற்றுக் கொண்டிருக்கிறோமோ அவர்களை எல்லாம் நாங்கள் போடுவோம்.

மேலூரிலுள்ள அரசினர் ஆண்கள் கல்லூரி

* வினா எண். 67— திரு ரா. கு. பெருமாள் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா— .

(அ) மேலூரில் உள்ள அரசினர் ஆண்கள் கல்லூரியை விரிவுபடுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) பட்ட வகுப்புகள் தொடங்கும் எண்ணம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) 1979–80-ம் கல்வி ஆண்டில் வேதியியல் (B.Sc., Chemistry) பட்டப்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, பொதுவாக தமிழ்நாட்டிலே பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டம் பெற்ற மாணவ, மாணவிகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால் வெறுமனே வீட்டில் இருப்பதைக் காட்டிலும் கல்லூரிகளில் சென்று படிக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. ஆகவே, பட்ட மேல் படிப்பை கல்லூரிகளில் தொடங்கும் எண்ணம் இருக்கிறதா? அத்துடன் பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டம் பெற்றிருக்கிற மாணவர்களுக்கு மாதாமாதம் ஊதியம் கொடுக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பி.யு.சி. வகுப்புகளை எடுத்துவிட்ட காரணத்தால் உபரியாக இருக்கிற ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற வகையில் இந்த ஆண்டு பல்வேறு வகுப்புகளைத் தொடங்க இருக்கிறோம். இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு உபரியாக இருக்கிற ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற வகையில் நாம் புதிய வகுப்புகளைத் தொடங்குவதுதான் உசிதமாக இருக்கும். காரணம் நாம் அரசு பணத்தைச் செலவிடும்போது சிக்கனமாக அல்லது முறையாக செலவிட வேண்டுமென்று கருதுகிறோம். அந்த நிலைமைகளை கருத்திற்கொண்டு புதிய பட்டப் படிப்பு வகுப்புகளைத் தொடங்க வேண்டிய நிலையிலே பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அதுபற்றி பல்கலைக் கழகங்கள் ஆலோசித்து வருகின்றன. எப்படிப்பட்ட பட்டப்படிப்பு வகுப்புகளைத் தொடங்குவது என்று இறுதி முடிவு எடுத்தவுடன் புதிய வகுப்புகளைத் தொடங்க வசதியாக இருக்கும்.

அம்பத்தூர் நகரியத்தில் தெருவிளக்குகள்.

* வினா எண் 68 – திரு. க. சுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் நகரியத்தில் தெரு விளக்குகள் எரியவில்லை என்ற புகார் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) ஆம்

(ஆ) அதுபற்றி நகரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.